**துருசவிய நிதியம் - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

துருசவிய நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 ஆண்டுகளிற்கும் 16 ஆண்டுகளிற்கும் இடையேயான காலப்பகுதியில் முன்கொண்டுவரப்பட்ட ரூபா 851,045 கூட்டுமொத்தமான பெறவேண்டிய கடன் மீதிகளில் நிலத் தராசுகளை கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட ரூபா | இது தொடர்பாக மீண்டும் சங்கங்களிற்கு அறிவித்து சங்கங்களிடமிருந்து ஆகக்கூடிய கடன் தொகையை அறவீடு செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் | நீண்ட காலப்பகுதியொன்றிற்கு அறவிடப்படாத கடன்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| 249,920 கடன் மீதிக்குரிய சங்கங்கள் செயற்பாடற்ற நிலைமையில் காணப்படுகின்றதால் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கை எதிர்காலத்தில் எடுக்கப்படும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2000 இன் 23 ஆம் இலக்க துருசவிய நிதிய அதிகாரச்சட்டத்தின் 32.3 ஆம் பிரிவு | நிதியம் ஸ்தாபிக்கப்பட்டு 16 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் இந்த அதிகாரச்சட்டத்திலுள்ள ஒழுங்குவிதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | சட்டமா அதிபர் திணைக்களத்தால் வரையப்பட்ட ஒழுங்குவிதிகள் நிதியத்திற்கு கிடைத்திருந்த போதிலும் அவை பாராளுமன்றத்தால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்ததா என்பதை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஆவணங்கள் நிதியத்தில் காணப்படாததால் இது தொடர்பாக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சிடமிருந்து தேவையான தகவல்கள் பெறப்பட்டு எதிர்காலத்தில் தெளிவுபடுத்தப்படும். | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் வர்த்தமானியில் ஒழுங்குவிதிகள் பிரசுரிக்கப்பட்டு பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஆ) | 2008 மார்ச் 03 ஆம் திகதிய 1/2008 ஆம் இலக்க திறைசேரி செயற்பாடுகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | (i) அரசாங்கத்தால் நேரடியாக மற்றும் மறைமுகமாக நிதி வழங்கும் நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்திற்கு நேரடியாக மற்றும் மறைமுகமாக இறுதிப் பொறுப்புக்களை ஒப்படைக்கும் நிதியங்களின் செயற்திறன் தொடர்பாக தேசிய பொருளாதாரத்திற்கு மிகவும் சிறந்த பெறுபேறுகளை வழங்குகின்ற முறையான முதலீட்டு | வங்கிக் கணக்கு மீதி மற்றும் காசுப் புத்தக மீதி என்பன எப்பொழுதும் ரூபா 1½ மில்லியனிற்கும் ரூபா 2½ மில்லியனிற்கும் இடையேயான வீச்சில் காணப்படுகின்றன. நிறுவனத்தால் வழங்கப்பட்ட காசோலைகள் கடன்கொடுத்தோர்களிற்கு இடையே தீர்வை செய்யப்படாமை அதற்கான காரணமாக உள்ளது. | முதலீடுகள் வங்கி நடைமுறைக் கணக்குகளில் செயற்பாடின்றி வைத்திருக்கப்படாமல் செயற்திறனாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறை பின்பற்றப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 0.4 மில்லியனுக்கும் ரூபா 6.9 மில்லியனுக்கும் இடைப்பட்ட வீச்சுடைய மீதிகள் விளைவற்று வங்கி நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | | |
| (ii) | அரசாங்க வங்கிகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் முதிர்வடையும் போது இலங்கை மத்திய வங்கி மற்றும் திறைசேரியினால் மத்திய கால முதலீடுகளுக்காக செலுத்தப்படுகின்ற வட்டி வீதத்திற்கு உட்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிகளுக்காக வங்கி வைப்புக்களில் அல்லது திறைசேரி உண்டியல்களில் மீண்டும் முதலீடு செய்யப்பட வேண்டிய போதிலும் நிதியத்தின் ரூபா 6,193,862 தொகையான முதலீடானது 2017 சனவரி 02 ஆம் திகதியிலிருந்து 06 மாத கால குறுங்காலப்பகுதிக்கு அரச வங்கியொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீர்செய்வதற்கு தேவையான நடவடிக்கையை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | திறைசேரியால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பணம் செயற்திறனாக முதலீடு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 234,946 மிகையொன்றாக காணப்பட்டதுடன் ஒப்பிடும் போது அதற்கு எதிரான முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 439,483 ஆக இருந்தது. அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 674,429 முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. ஏனைய வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பே இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாக காணப்பட்டது.

### 2.2 பிரதான வருமான போக்குகளின் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் ரூபா 1,027,426 ஏனைய வருமானத்தை முன்னைய ஆண்டில் பெறப்பட்ட ரூபா 2,180,784 உடன் ஒப்பிடும் போது ரூபா 1,153,358 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன் இதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வேறுபாட்டு சதவீதமானது 52 சதவீதமாக காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இறப்பர் கைத்தொழில் தொடர்பான முதலீடுகளை மேம்படுத்துதல், சிறிய இறப்பர் தோட்டங்களின் விளைவுகளை உற்பத்திகளிற்கு மாற்றுவதற்குத் தேவையான இறப்பர் செயன்முறைப்படுத்தும் பிரிவுகள், இறப்பர் தொழிற்சாலைகள் மற்றும் ஏனைய வசதிகளை கையேற்றல், முன்னேற்றுதல் அல்லது ஸ்தாபித்தல் மற்றும் அத்தகைய இறப்பர் செயன்முறைப்படுத்தும் பிரிவுகள் அல்லது தொழிற்சாலைகளின் உற்பத்திகளின் விற்பனையை மேம்படுத்துதல் என்பன நிதியத்தின் நோக்கங்களாகும். அச் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எங்களது நிறுவனத்தின் நோக்கங்களுடன் தொடர்புடைய எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்குத் தேவையான பாதீட்டு மதிப்பீடு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் ஊடாக பொதுத் திறைசேரிக்கு அனுப்பப்படுகின்றது. எனினும் பொதுத் திறைசேரியால் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற நிதியேற்பாடுகள் எங்களது நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு எல்லா நேரத்திலும் போதியளவாக காணப்படவில்லை.<br><br>எனினும் எங்களுக்கு மேற்கொள்ளப்படுகின்ற நிதியேற்பாடுகளை முறையாக முகாமை செய்வதன் மூலம் இறப்பர் சிறுநிலவுடைமையாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக சில அபிவிருத்திச் செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. | நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மேலும் எங்களது நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்குத் தேவையான சில அம்சங்களை இனங்காண்பதற்கும் அமைச்சிற்கு சில அபிவிருத்திச் செயற்திட்டங்களை கையளிப்பதற்கும் ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதனால் எங்களது நிறுவனங்களின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காகவும் இறப்பர் சிறுநிலவுடைமையாளர்களிற்கு செயற்திறனான சேவையை வழங்குவதிலுள்ள அபிவிருத்திச் செயற்திட்டங்களிற்காகவும் நிதியேற்பாடுகளை பெற்றுக்கொள்ளுதல் அத்தியாவசியமானதாக காணப்படுகின்றது. அதற்கிணங்க இது தொடர்பில் உரிய தரப்பினர்களிற்கு ஏற்கனவே தெளிவுபடுத்தப்பட்டிருந்ததுடன் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (ஆ) 05 உத்தியோகத்தர்களிற்கு 2002 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 320,110 கூட்டுமொத்தமான மேலதிக சம்பளக் கொடுப்பனவுகளில் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்ட ரூபா 144,000 தொகை திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | முன்னைய ஆண்டின் தொகைகளுடன் சேர்த்து இந்த ஆண்டில் மொத்த தொகையை பொதுத் திறைசேரிக்கு அமைச்சினுடாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சம்பளக் கொடுப்பனவிற்காக திறைசேரியால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகள் மூலம் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததால் அச் செலவினம் மீண்டும் அறவிடப்படுகின்ற போது அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 14 மாவட்டங்களில் உள்ள இறப்பர் சிறுநிலவுடைமையாளர்களின் சமூக பொருளாதார நியமங்களை உயர்த்தும் | செயற்பாடற்ற சங்கங்கள் தொடர்பான இவ் மதிப்பீடு 2017 திசெம்பரில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டிலிருந்து புதிய | நிதியத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நோக்கத்துடன் பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கை 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 712 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் 329 செயற்பாடற்ற நிலைமையில் காணப்பட்டது. அச் செயற்பாடற்ற சங்கங்களை செயற்படும் நிலைமைக்கு கொண்டுவருவதற்கு அல்லது அவற்றின் பதிவுகளை இரத்துச் செய்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முறைமையின் பிரகாரம் அனைத்து துருசவிய சங்கங்களையும் வகைப்படுத்தலிற்கு உட்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இதனால் எதிர்காலத்தில் இச் செயன்முறை ஊடாக இனங்காணப்பட்ட சில பிரிவுகளின் கீழான சில பொது நியதிகளின் பிரகாரம் புள்ளிகளை வழங்கும் முறையொன்றின் கீழ் அனைத்து சங்கங்கள் தொடர்பான வகைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (ஆ) | 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை மொனராகலை மாவட்டத்தில் சிறுநிலவுடைமையாளர் பெருந்தோட்ட தொழில்முனைவோர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட 130 கிராமிய இறப்பர் மன்றங்கள் மற்றும் 31 தொகுதி செயன்முறைப்படுத்தல் நிலையங்கள் என்பன அவற்றின் ஆக்கபூர்வமான செயற்பாட்டிற்காக அமைச்சு செயலாளரின் 2017 மார்ச் 01 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் நிதியத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தன. எனினும் அவ் மன்றங்கள் மற்றும் செயன்முறைப்படுத்தல் நிலையங்களை ஆக்கபூர்வமாக செயற்படுத்தக்கூடியவாறு துருசவிய சங்கங்களின் கீழே பதிவுசெய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | துருசவிய நிதிய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் துருசவிய நிதியத்திற்கு ஒரே தடவையில் அவ் அனைத்து மன்றங்களினையும் கையளிப்பதற்கான சாத்தியத்தன்மை காணப்படவில்லை. முதலாவதாக அவ் அனைத்து மன்றங்களும் அதற்காக ''துருசவிய சங்கங்கள்'' ஆக முறையாக பதிவு செய்யப்பட வேண்டும். அதற்கிணங்க அவற்றின் அடிப்படை செயற்பாடுகள் முன்னேற்றகரமாக உள்ளன. மேலும் துருசவிய நிதியத்தின் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் தொகுதி செயன்முறைப்படுத்தும் நிலையங்களை மேற்பார்வை செய்கின்றன. பின்வரும் நடைமுறையிலுள்ள சிக்கல்கள் காரணமாக அச் செயற்பாட்டை துரிதப்படுத்த முடியாதுள்ளதென மேலும் அறிவிக்கப்படுகின்றது. துருசவிய நிதியத்தின் ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் மொனராகலை, பதுளை மற்றும் அம்பாறை ஆகிய 3 மாவட்டங்களிலுள்ள 29 பிரிவுகளை மேவுகை செய்யக்கூடியவாறு ஸ்தாபிக்கப்பட்ட துருசவிய சங்கங்களின் ஒருங்கிணைப்பு கடமைகளிற்காக | கணக்காய்வுத் திகதியான 2017 மார்ச் 01 இலிருந்து 02 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலப்பகுதி கடந்திருந்ததால் உரித்துக் கையளித்தல் நடவடிக்கைகள் மேலும் தாமதப்படுத்தப்படக்கூடாது. |

இணைக்கப்பட்டுள்ளதுடன் இதற்கு மேலதிகமாக அவ் உத்தியோகத்தர் இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் மற்றும் இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் என்பவற்றுடன் இணைந்து எஸ்ரீஏஆர்ஆர் செயற்திட்டத்தின் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தும் நோக்கங்களிற்காக வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.

**3.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டு ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரை ரூபா 3,492,301 தொகை செலவிட்டு இறப்பர் சீட் (Rubber sheets) தயாரிப்பதற்காக நிர்மாணிக்கப்பட்ட 03 தொகுதி செயன்முறைப்படுத்தும் நிலையங்களில் ஒரு நிலையம் 03 ஆண்டு காலத்திற்கு மேலாக செயற்பாடற்றிருந்ததுடன் ஏனைய 02 இன் நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. இதனால் அச் செயன்முறைப்படுத்தும் நிலையங்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட முடியாதிருந்தன. | **1.** | **ஹெடிகல்ல தொகுதி செயன்முறைப்படுத்தும் நிலையம்**<br><br>உற்பத்திச் செயன்முறையை ஆரம்பிப்பதற்காக இல. 10, தெஹிகஹவெல, போம்புவள முகவரியில் குடியிருக்கும் திரு. எச்.டி.நிமல் அவர்களால் வேண்டுகோள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் துருசவிய நிதியத்தின் பணிப்பாளர் சபைக்கு இவ் வேண்டுகோள் வழங்கப்பட்டு எடுக்கப்பட்ட தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | ஆதனங்கள் செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| | **2.** | **கனேபள்ள தொகுதி செயன்முறைப்படுத்தும் நிலையம்**<br><br>இத் தொகுதி செயன்முறைப்படுத்தும் நிலையத்தின் நிர்மாணங்கள் 2008 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. 2008 ஆம் ஆண்டில் இத் தொகுதி செயன்முறைப்படுத்தும் நிலையத்தின் நிர்மாணங்களை ஆரம்பித்த போது சுற்றாடல் மாசடைதல் பிரச்சனையை அடிப்படையாகக் கொண்டு பிரதேசத்தின் | |

குடியிருப்பாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் நிர்மாணங்கள் அரைவாசியில் தொடரப்பட முடியாதிருந்தன. மேலும் பிரதேசத்தின் இறப்பர் பயிர்ச்செய்கையாளர்களும் ஏனைய பயிர்ச்செய்கைகளிற்கு மாறியிருந்ததால் துருசவிய சங்கம் அவ்வாறு செயற்பாடற்றிருந்தது.

**3. எரபொல எக்சத் தொகுதி செயன்முறைப்படுத்தும் நிலையம்**

இத் தொகுதி செயன்முறைப்படுத்தும் நிலையத்தின் நிர்மாணங்கள் அரைவாசியில் தொடரப்படாதிருந்தன. இறப்பர் சிறுநிலவுடைமையாளர்கள் இறப்பர் விலை வீழ்ச்சியடைந்ததன் காரணமாக இறப்பர் பயிர்ச்செய்கையிலிருந்து பின்வாங்கியிருந்ததால் தற்போது சங்கம் செயற்பாடற்றிருந்தது.

இவ் இரண்டு தொகுதி செயன்முறைப்படுத்தும் நிலையங்களை செயற்படுத்துவது தொடர்பாக தற்போது இப் பிரதேசத்தில் இறப்பர் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள இறப்பர் சிறுநிலவுடைமையாளர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு துருசவிய நிதியத்தின் முகாமைத்துவச் சபையிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.